# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 216/மா/2023**
**நாள் : 30.08.2023**

திரு. S. வேணுகோபால்,
சென்னை – 99. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 6, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கொளத்தூர், வி.வி.நகர், 5வது தெரு, ஸ்ரீபாலாஜி பிளாட்ஸ், பிளாட் நெ.2, என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. வேணுகோபால் என்பவரின் 22.07.2023 நாளிட்ட மனு 24.07.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 216/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, கொளத்தூர், வி.வி.நகர், 5வது தெரு, ஸ்ரீபாலாஜி பிளாட்ஸ், பிளாட் நெ.2, என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. வேணுகோபால் என்பவரின் 22.07.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்:

"நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். சென்னையில் உள்ள பல பிரதான சாலைகளின் நடைபாதை மற்றும் சாலையின் ஒரு பகுதியை பலர் ஆக்கிரமித்து பொது மக்களுக்கு இடையூராக உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற மாநகராட்சி அதிகாரிகள் சிறிதும் கவனம் செலுத்துவதில்லை என்பது உண்மை. நான் DT Next ஆங்கில நாளிதழில் 10.10.2020 மற்றும் 15.12.2020 தேதியில் சென்னை உயர் நீதிமன்ற மாண்புமிகு நீதிபதிகள் அமர்வு சென்னை மாநகராட்சிக்கு, நடைபாதை மற்றும் சாலையோரங்களில் உள்ள கடைகள் மற்றும் இதர ஆக்கிரமிப்புகளையும் அனைத்து மண்டலங்களில் உள்ள கடைகள் மற்றும் இதர ஆக்கிரமிப்புகளையும் அனைத்து மண்டலங்களிலும் அகற்றுமாறு ஆணையிட்ட செய்தி வந்ததால், நான் என் வீட்டின் அருகாமையில் உள்ள பூம்புகார் நகர், முதல் பிரதான சாலை நடைபாதையில் அமைந்துள்ள கடைகள் மற்றும் இதர ஆக்கிரமிப்புகளை அகற்றகோரி செயற் பொறியாளர் பகுதி 15, மண்டலம்-6, அவர்களுக்கு 15.07.2020 மற்றும் 13.10.2020 தேதிகளில் புகார் கடிதங்கள் அனுப்பியும் நடவடிக்கை எடுக்காததால், வட்டார இணை ஆணையர் (RDC), மத்தியம், சென்னை மத்திய வட்டாரம், செனாய் நகர், சென்னை-30, அவர்களுக்கு மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற கோரி புகார் கடிதம் அனுப்பியிருந்தேன். அக்கடிதத்தில் சமீபத்தில் சென்னை ஸ்மார்ட் சிட்டி பிராஜெக்ட்படி சென்னை மாநகராட்சி பல லட்சங்கள் செலவழித்து பூம்புகார் நகர் முதல் பிரதான சாலையின் நடைபாதைகளை

அகலப்படுத்தி, அழகுபடுத்தி "நடைபாதை நடப்பதற்கே" என்ற வாசகம் அடங்கிய போர்டுகள் பல இடங்களில் அமைத்தனர். தற்போது அச்சாலையில் பல இடங்களில் நடைபாதையில் கடைகள் மற்றும் இதர ஆக்கிரமிப்புகளை ஒரு சில நபர்களால் செய்யப்படுவதை பார்க்கும்போது "நடைபாதை நடப்பதற்கே" என்ற வாசகத்தை துச்சப்படுத்துகின்றனர். சென்னையில் பல பிரதான சாலைகளில் "நடைபாதை நடப்பதற்கே" என்ற வாசகம் அடங்கிய போர்டுகள் இருந்தும் நடைபாதைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை பார்க்கும்போது அரசு இயந்திரம் செயல்படவில்லையா? என்ற சந்தேகம் எழுகின்றது. வட்டார இணை ஆணையர் (RDC) (Central) மத்தியம் அவர்களுக்கு அனுப்பிய புகார் கடிதத்தில் உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்த பிறகாவது தானாக முன் வந்து மேற்படி நான் கோரிய பூம்புகார் நகர் பிரதான சாலை நடைபாதை ஆக்கிரமிப்பு மற்றும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மண்டலங்களில் (Zone 6 to Zone 10) உள்ள சாலைகள் மற்றும் நடைபாதைகள் ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி கோரியிருந்தேன்.

ஆனால் இதுநாள் வரை 2 ½ ஆண்டுகாலமாகியும் வட்டார இணை ஆணையர் அவர்களிடமிருந்து ஆக்கிரமிப்பை அகற்ற எந்த நடவடிக்கையை எடுக்கவில்லை என்பதை தங்களுக்கு தெரிவித்து கொள்கிறேன்.

நான் நடைபாதை ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி முதல் புகார் கடிதம் 15-07-2020 தேதியில் அனுப்பி 3 ஆண்டுகள் ஆகியும், அந்த 3 ஆண்டுகளில் மற்ற அதிகாரிகளுக்கு பல புகார் கடிதங்கள் அனுப்பியும் எந்தவொரு நடவடிக்கையும், புகார் கடிதங்கள் மேல் 3 ஆண்டுகளில் எடுக்கவில்லை என்பதை தங்களுக்கு தெரிவித்து கொள்கிறேன். மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளின் மேல் கடும் நடவடிக்கை எடுக்கவும், மற்றும் ஆக்கிரமிப்பை உடனடியாக அகற்றவும் இந்த முறையீட்டு கடிதத்தை தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். தாங்கள் இந்த முறையீட்டு கடிதத்தை ஏற்றுக்கொண்டு, விசாரணை நடத்தி, நியாயம் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். பார்வையில் குறிப்பிட்ட கடிதங்களின் நகல்களை தங்கள் பார்வைக்காக இம்முறையீட்டு மனுவுடன் இணைத்துள்ளேன்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்–6ன் மண்டல அலுவலரிடம் 7.8.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்– 6ன் மண்டல அலுவலர் 7.8.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:–**

It is informed that the complainant herein had sent petitions requesting to remove the encroachments on the footpath of Poompuhar Nagar first main road. In this regard, it is to submit that on behalf of Greater Chennai Corporation regular encroachment drives are conducted on weekly basis. The said Poompuhar Nagar first main road temporary encroachments are being removed then and there with the protection of the local jurisdiction police.

By this regular encroachment drives we assure that the said Poompuhar Nagar first main road footpath will be kept free from the encroachments. Photos of the encroachement drive conducted in the said road are enclosed with this report.

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 17.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 07.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 17.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6 பூம்புகார் நகர் முதல் பிரதான சாலையில் உள்ள நடைபாதையை ஆக்கிரமித்து இளநீர் கடை, பூக்கடை மற்றும் இஸ்திரி கடை போன்ற பல்வேறு கடைகள் தோன்றியுள்ளன. மாநகராட்சிக்கு எவ்வித வரியும் செலுத்தாமல் நடைபெறும் மேற்கண்ட கடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. இளநீர் வியாபாரி போன்றோர் தினமும் ரூபாய் ஆயிரத்திற்கும் மேலாக சம்பாதித்து வரும் நிலையில் அவர்கள் வரி ஏதும் செலுத்தாததால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதுமட்டுமல்லாமல், நடைபாதையை ஆக்கிரமித்து கடைகளை நடத்துவதால் அங்கு பொது மக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. மேற்கண்ட பாதையை ஆக்கிரமித்து நடைபெறும் கடைகள் குறித்து மாநகராட்சி அலுவலகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பல்வேறு மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மேற்கண்ட பகுதியில் மாநகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வியாபாரம் செய்யும் கடைகளை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 22.7.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ன் உதவி செயற்பொறியாளர் 17.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6 பூம்புகார் நகர் முதல் பிரதான சாலையில் உள்ள நடைபாதையை ஆக்கிரமித்து கடைகள் தோன்றியுள்ளது குறித்த புகார் மனு மனுதாரரிடமிருந்து பெறுவதற்கு முன்பிருந்தே அவ்வப்போது புதிது புதிதாக மாநகராட்சி நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்து தோன்றும் கடைகள் குறித்து அடிக்கடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவை உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகிறது என்பதையும், மேலும் இனி வருங்காலங்களில் மேற்கண்ட இடத்தில் நடைபாதையை ஆக்கிரமித்து கடைகள் ஏற்படாதவாறு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னால் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் 6 அவர்களின் 7.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்"

**இந்நேர்வில், மனுதாரர் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர் சென்னை கொளத்தூர், பூம்புகார் நகர், மண்டலம்-6, வார்டு 65ல் உள்ள முதல் பிரதான சாலையை ஆக்கிரமித்து சிறு கடைகள் நிறுவப்பட்டு, பொது மக்கள் நடப்பதற்கு இடையூறாக இருப்பதாகவும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, அலுவலகத்தில் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால், தன் மனு மீது உரிய விசாரணை நடத்தி

ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், சம்பந்தப்பட்ட மண்டலம்-6ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட கொளத்தூர் பூம்புகார் பிரதான சாலையில் கடைகள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்ததை முறையாக கால இடைவெளியில் அகற்றப்படுவதாகவும், வருங்காலங்களில் மேற்கண்ட நடைபாதையை ஆக்கிரமித்து கடைகள் ஏற்படாதவாறு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ன் உதவி செயற் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் மனுதாரர் 15.7.2020 மற்றும் 20.6.2022 நாளிட்டு அளித்த புகார் மனுவிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6ன் அலுவலர்கள் 29.6.2022 அன்று மேற்கண்ட நடைபாதையில் அமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றியுள்ளனர் என்பது புகைப்படங்களின் வாயிலாக அறிய முடிகிறது. இவ்வாறான உடனடி செயல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நற்பெயர் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமில்லை என்பதை இம்முறைமன்றம் சுட்டி காட்ட விரும்புகிறது.

இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ன் உதவி செயற் பொறியாளர் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு இனி வருங்காலங்களில் மேற்கண்ட நடைபாதையில் ஆக்கிரமிப்பு செய்யப்படாமல் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ன் மண்டல அலுவலருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. S. வேணுகோபால்,
   பிளாட் நெ.2, ஸ்ரீபாலாஜி பிளாட்ஸ்,
   5வது தெரு, வி.வி.நகர், கொளத்தூர்,
   சென்னை – 600 099.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 6, பெருநகர சென்னை மாநகராட்சி,
   158, ஸ்டாரன்கன்ஸ் சாலை,
   பட்டாளம், சென்னை – 600 012.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்**:மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்